Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனி, பிப்ரவரி 15, 2025 | இதழ் 308

# சர்வதேச வாழும் கலை மகளிர் மாநாட்டின் தொடக்க அமர்வில் குடியரசுத்தலைவர் கலந்துகொண்டார்

சென்னை, 15 பிப்ரவரி 2025: பெங்களூரில் பிப்ரவரி 14, 2025 ல் நடைபெற்ற வாழும் கலை அமைப்பின் சர்வதேச மகளிர் மாநாட்டின் தொடக்க அமர்வில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கலந்து கொண்டார்.

இந்தியாவின் பெண்கள் சக்தி ஆர்வமாக சாதித்து வருவதாகவும் தங்களின் பங்களிப்பில் உயர்ந்து வருவதாகவும் குடியரசுத் தலைவர் கூறினார். அது அறிவியல், விளையாட்டு, அரசியல், கலை அல்லது கலாச்சாரம் என எத்துறையாக இருந்தாலும், நமது சகோதரிகளும், மகள்களும் தலை நிமிர்ந்து முன்னேறி வருகின்றனர். அவர்கள் தங்கள் குடும்பங்கள், நிறுவனங்கள் மற்றும் நாட்டைப் பெருமைப்படுத்துகிறார்கள். மன வலிமை இல்லாமல் தடைகளை உடைத்து சவால்களை சந்திக்க முடியாது. ஒவ்வொரு பெண்ணும் தைரியத்தை சேகரிக்கவும், பெரிய கனவுகளைக் காணவும், தனது கனவுகளை அடைய தனது முழு பலத்தையும், ஆற்றலையும் பயன்படுத்தவும் வேண்டுமென அவர் வலியுறுத்தினார். ஒவ்வொருவரும் தங்கள் இலக்கை நோக்கி எடுத்து வைக்கும் ஒவ்வொரு சிறிய அடியும் வளர்ந்த இந்தியாவை நோக்கிய ஒரு படியாகும் என்று அவர் கூறினார்.

தொழில்நுட்பங்களின் இடையூறு யுகத்தில் நாம் இருக்கிறோம் என்று குடியரசுத் தலைவர் தெரிவித்தார். தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் சில வழிகளில் நமக்கு சிறந்த வாழ்க்கைத் தரத்தை அளித்துள்ளன. இத்தகைய போட்டி நிறைந்த உலகில், நமது மனித மதிப்புகள் அப்படியே இருப்பதை உறுதி செய்ய வேண்டும். உண்மையில், ஒவ்வொரு மனிதனும் கருணை, அன்பு மற்றும் ஒற்றுமை போன்ற மனித மதிப்புகளை மேம்படுத்துவதற்கு கூடுதல் முயற்சியை உணர்வுபூர்வமாக மேற்கொள்ள வேண்டும். இங்குதான் பெண்களின் பங்கு மிகவும் முக்கியமானதாகிறது.

கருணையின் மூலம் வழிநடத்தும் சிறப்புத் திறன் பெண்களுக்கு உண்டு. தனிநபரைத் தாண்டிப் பார்த்து, குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் உலக அளவில் உறவுகளின் நல்வாழ்வுக்காக பாடுபடும் திறன் அவர்களிடம் உள்ளது. இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் அனைத்து பெண்களும், தங்கள் வாழ்க்கையையும், தங்களைச் சுற்றியுள்ளவர்களின் வாழ்க்கையையும் மிகவும் அழகாகவும், அமைதியாகவும் மாற்றுவதற்குப் பயன்படுத்தக்கூடிய ஆன்மீகக் கொள்கைகளை கடைபிடிப்பார்கள் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

கல்வித் துறையில் வாழும் கலை பல முயற்சிகளை மேற்கொண்டு வருவது குறித்து குடியரசுத் தலைவர் மகிழ்ச்சி தெரிவித்தார். நமது குழந்தைகளின் கல்வியை விட மனிதகுலத்தில் பெரிய முதலீடு எதுவும் இல்லை என்று அவர் கூறினார்.

சரியான வழிகாட்டுதல் மற்றும் ஆதரவுடன், பல குழந்தைகள் நமது நாட்டின் பயணத்தில் தீவிர பங்கேற்பாளர்களாக மாற முடியும் என்று கூறிய அவர், பருவநிலை மாற்றம் போன்ற உலகளாவிய சவால்களைச் சமாளிக்க ஒன்றிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார். சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் குறித்து நீங்கள் அனைவரும் சிந்திக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

# மாபெரும் கிரெடாய் 'பேர்ப்ரோ 2025' ரியல் எஸ்டேட் கண்காட்சி: முதலமைச்சர் ஸ்டாலின் துவக்கி வைத்தார்

## கிரெடாய் சென்னையின் தொலைநோக்கு திட்டமான 'சூப்பர் சென்னை' திட்டத்தை அறிமுகம் செய்தார்




சென்னை, 15 பிப்ரவரி 2025: கிரெடாய் சார்பில் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெறும் 17வது 'பேர்ப்ரோ 2025' மாபெரும் ரியல் எஸ்டேட் கண்காட்சியை முதல்வர் மு.க. ஸ்டாலின் து'க்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு மற்றும் தமிழக அரசின் பிற முக்கிய பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமான பேர் கலந்து கொண்டனர்.

கண்காட்சி துவக்க விழாவின் போது, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், சென்னையை வருங்காலத்திற்கு தயாராக உலகளாவிய நகரமாக, இந்தியாவில் முதலீட்டிற்கு சிறந்த நகரமாக மாற்றும் கிரெடாய் சென்னையின் யூொலை நோக்கு திட்டமான 'சூப்பர் சென்னை' திட்டத்தையும் துவக்கி வைத்தார். 'சூப்பர் சென்னை' என்பது வெறும் ஒரு முன் முயற்சி மட்டுமல்ல, புதுமையான மற்றும் வேகமாக வளர்ந்து வரும் சென்னையின் பாரம்பரியம் மற்றும் வளமையை உலக அளவில் கொண்டும் செல்வதோடு, தொழில் நுட்பம், வணிகம், கலாச்சாரம் மற்றும் நவீன வாழ்க்கை முறைக்கான மையமாகவும் மாற்றும் திட்டம் ஆகும். சென்னை நகரின் சிறப்பை வெளிப் படுத்துவதன் மூலம், உலகளாவிய கவனத்தையும் முதலீட்டையும் ஈர்க்கும் ஒரு துடிப்பான திட்டம் ஆகும்.

இந்த ஆண்டு கண்காட்சியானது பிரமாண்டமாகவும் சிறப்பு வாய்ந்ததாகவும் இருக்கும் என்று கிரெடாய் உறுதி அளித்துள்ளது. ஏனெனில், வீடு வாங்குபவர்களுக்கு 32.5 மில்லியன் சதுர அடி குடியிருப்புகள், 0.25 மில்லியன் சதுர அடி வணிக இடம் மற்றும் 325 ஏக்கர் வீட்டு மனைகள் என 500க்கும் மேற்பட்ட திட்டங்கள் இந்த கண்காட்சியில் இடம்பெற உள்ளது. பேர்ப்ரோ கண்காட்சியில், இதன் முதன்மை வங்கியாளரான ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, வீடு வாங்குபவர்களுக்கு பிரத்யேக கடன் சலுகைகளை வழங்க உள்ளது. மேலும் இதனுடன், எச்டிஎப்சி பேங்க், சென்ட்ரல் பேங்க், கனரா பேங்க் மற்றும் எல்ஐசி ஹவுசிங் பைனான்ஸ் உள்ளிட்ட ஐந்து முக்கிய வங்கிகள் கண்காட்சியில் பங்கேற்கின்றன. மிடு வாங்க ஆர்வமுடன் இந்த கண்காட்சிக்கு வருபவர்களுக்கு இந்த வங்கிகள் வீட்டு கடன் யூொடர்பாக பல்வேறு சலுகைகளை வழங்க உள்ளன.

உள்கட்டமைப்பு மேம்பாடு, மெட்ரோ விரிவாக்கம் மற்றும் சென்னையின் ரியல் எஸ்டேட் சந்தையில் முதலீட்டாளர்களின் நம்பிக்கை ஆகியவற்றின் காரணமாக, பிரீமியம் அடுக்குமாடி குடியிருப்புகள், வில்லாக்கள், மனைகள் மற்றும் வணிக இடங்களுக்கான தேவை அதிகரித்து வருகிறது. ரூ.15 லட்சம் முதல் ரூ15 கோடி வரையிலான சொத்துக்கள், இக்கண்காட்சியில் இடம்பெற உள்ளன. இந்த திட்டங்கள் அனைத்தும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் ஆகும்.

நிகழ்ச்சியில் தேசிய கிரெடாய் அமைப்பின் தென் மண்டல துணைத் தலைவர் ஸ்ரீதரன் பேசுகையில், உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் மெட்ரோ விரிவாக்கம் ஆகியவற்றின் காரணமாக சென்னை நகரின் சொத்து மதிப்பு அதிகரித்து வருவதால், சென்னை முதலீட்டுக்கு சிறந்த இடமாக வளர்ந்து வருகிறது.

இந்த கண்காட்சியானது வீடு வாங்குபவர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் சிறந்த வாய்ப்பை வழங்குகிறது என்று தெரிவித்தார். கிரெடாய் சென்னை தலைவர் முகமது அலி பேசுகையில், உள்கட்டமைப்பு வளர்ச்சி மற்றும் அதிகரித்து வரும் முதலீட்டாளர் நம்பிக்கையால் சென்னையின் ரியல் எஸ்டேட் சந்தை நல்ல வளர்ச்சி கண்டு வருகிறது. வீடு வாங்குபவர்களுக்கு 'பேர்ப்ரோ 2025' கண்காட்சி, அரசின் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களை ஆராய்ந்து, அவர்களின் கனவு வீடுகள் குறித்து சரியான முடிவுகளை எடுப்பதற்கான சிறந்த இடமாகும்.

'பேர்ப்ரோ 2025' கண்காட்சி ஆலோசகர் எஸ். சிவகுருநாதன் பேசுகையில், கடந்த 16 ஆண்டுகளாக சென்னையின் மிகவும் நம்பகமான சொத்து கண்காட்சியாக பேர்ப்ரோ இருந்து வருகிறது, இது வீடு வாங்குபவர்களுக்கு வெளிப்படைத்தன்மை மற்றும் சிறந்த மதிப்பை வழங்கி வருகிறது. இந்த ஆண்டு அதிக அளவிலான மக்கள் இந்த கண்காட்சிக்கு வருவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம் என்று தெரிவித்தார்.

கண்காட்சி ஒருங்கிணைப்பாளர் கிருதிவாஸ் பேசுகையில், "சென்னையின் நகர்ப்புற பகுதிகள் வேகமாக வளர்ச்சி அடைந்து வரும் நிலையில், இந்தக் கண்காட்சியானது ரியல் எஸ்டேட் நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் வீடு வாங்குபவர்களுக்கு இடையே பாலமாக உள்ளது. இவர்கள் அனைவருக்கும் இந்த கண்காட்சி மிகுந்த பலன் அளிக்கும் என்று தெரிவித்தார்.

# வெடிமருந்து, ஏவுகணைகளைக் கொண்டு செல்லும் 8-வது படகு வெற்றிகரமாக இயக்கி வைக்கப்பட்டது

சென்னை, 15 பிப்ரவரி 2025: வெடிமருந்து, ஏவுகணைகளைக் கொண்டு செல்லும் 8-வது படகு பிப்ரவரி 14, 2025 அன்று மகாராஷ்டிராவின் மீரா பயந்தரில் இந்திய கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கொமடோர் என். கோபிநாத் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். ஏவுகணை மற்றும் வெடிமருந்துகளைக் கொண்டு செல்லும் எட்டாவது படகை அமைப்பதற்கான ஒப்பந்தம் விசாகப்பட்டினத்தில் உள்ள எம்.எஸ்.எம்.இ கப்பல் கட்டும் தளத்தில் உள்ள செகான் இன்ஜினியரிங் ப்ராஜெக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் பிப்ரவரி 19, 2021 அன்று முடிவடைந்தது. இந்த படகுகள் இந்திய கப்பல் வடிவமைப்பு நிறுவனம் மற்றும் இந்திய கப்பல் பதிவேடு (ஐ.ஆர்.எஸ்) ஆகியவற்றுடன் இணைந்து கப்பல் கட்டும் தளத்தால் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்படுகிறது. விசாகப்பட்டினத்தில் உள்ள கடற்படை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வகத்தில் (என்.எஸ்.டி.எல்) மாதிரி சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கப்பல் கட்டும் தளம் இதுவரை ஏழு படகுகளை வெற்றிகரமாக வழங்கியுள்ளது மற்றும் இந்திய கடற்படையால் அதன் செயல்பாட்டு பரிணாமத்திற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்தப் படகுகள் இந்திய அரசின் மேக் இன் இந்தியா மற்றும் தற்சார்பு இந்தியா முயற்சிகளை மேலும் வலுப்படுத்துகின்றன.

# உலகளவில் இரண்டாவது பெரிய தளமாக உருவெடுத்த இந்திய எரிசக்தி வாரம்

சென்னை, 15 பிப்ரவரி 2025: இந்திய எரிசக்தி வாரம் 2025, எப்போதும் இல்லாத அளவுக்கு அதிகளவிலான பங்கேற்பாளர்கள், கண்காட்சியாளர்களின் பங்கேற்புடன் வெற்றியடைந்ததாக, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் திரு ஹர்தீப் சிங் பூரி கூறியுள்ளார்.

பெட்ரோலியம், இயற்கை எரிவாயு, பசுமை எரிசக்தி, உயிரி எரிபொருள் உள்ளிட்ட பல்வேறு துறைகளை உள்ளடக்கிய இந்த நிகழ்வு எதிர்பார்ப்புகளை விஞ்சி குறிப்பிடத்தக்க வகையில் புதுமையான முன்னேற்றங்களை அடைந்துள்ளது என்று அமைச்சர் குறிப்பிட்டார். மூன்று ஆண்டுகளுக்குள், இந்தியா எரிசக்தி வாரம் உலகின் இரண்டாவது பெரிய எரிசக்தி தளமாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது என்றும், அதன் நான்காவது பதிப்பு கோவாவில் நடைபெற உள்ளது என்றும் திரு பூரி தெரிவித்தார். இந்திய எரிசக்தி வாரம் 2025, வெறும் ஒரு கட்டமைப்பு தளமாக இல்லாமல், உண்மையான வணிக பரிவர்த்தனைகளை எளிதாக்குவதன் மூலம், மற்ற உலகளாவிய எரிசக்தி மன்றங்களிலிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டுகிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார். எச்பிசிஎல் அரங்கில் காட்சிப்படுத்தப்பட்ட செலவு குறைந்த மாற்றல் கருவி போன்ற நடைமுறை கண்டுபிடிப்புகளை திரு ஹர்தீப் சிங் பூரி சுட்டிக்காட்டினார். இரு மற்றும் மூன்று சக்கர வாகனங்களில் உயிரி எரிபொருள் பயன்பாட்டை செயல்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. கூடுதலாக, முதலீட்டாளர்கள், உற்பத்தியாளர்கள் கோயம்புத்தூர் மற்றும் நுகர்வோர் ஒன்றிணைவதில் அமைச்சர் திருப்தி தெரிவித்தார், குறிப்பாக நெகிழ்வான எரிபொருள் வாகனங்களின் காட்சிப்படுத்தலில் இது தெளிவாகத் தெரிகிறது.

இந்தியா-அமெரிக்க எரிசக்தி ஒத்துழைப்பு குறித்துப் பேசுகையில், இருதரப்பு உறவுகளில், குறிப்பாக இயற்கை எரிவாயு துறையில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். இயற்கை எரிவாயு நுகர்வை தற்போது 6% இலிருந்து 15% ஆக உயர்த்துவதற்கான இந்தியாவின் குறிக்கோளை அமைச்சர் எடுத்துரைத்தார், திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (எல்என்ஜி) விநியோகங்களுக்கான அமெரிக்காவுடனான உறவின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்.



# அப்போலோ மருத்துவமனை வலிப்பு நோயின் சுழற்சியை தகர்த்தெறிய புதிய சிகிச்சை : வலிப்பு நோய்க்கான அதிநவீன அறுவை சிகிச்சை முறையை அறிமுகப்படுத்துகிறது!




சென்னை 15, பிப்ரவரி 2025: சென்னையில் உள்ள அப்போலோ மருத்துவமனை [அப்போலோ ஹாஸ்பிடல்ஸ் சென்னை] மேம்பட்ட தொழில்நுட்பத்தைக் கொண்டு வலிப்பு நோயை [எபிலெப்சி] குணப்படுத்துவதற்கான அறுவை சிகிச்சை முறையை [எபிலெப்சி சர்ஜரி புரோகிராம்] அறிமுகப் படுத்தியுள்ளது. இது விரிவான நரம்பியல் பராமரிப்புக்கான அப்போலோ மருத்துவமனையின் உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகிறது. இந்த முயற்சி அப்போலோவின் விரிவான மருத்துவ நிபுணத்துவம், வலிப்பு மேலாண்மை ஆகியவற்றுடன் அதிநவீன தொழில்நுட்பத்தை ஒருங்கிணைக்கிறது. மருத்துவ உயர் சிறப்புத் தன்மைக்கான அப்போலோ மருத்துவமனையின் விரிவான அர்ப்பணிப்பையும் சுகாதாரப் பராமரிப்பில் புதுமையையும் இந்தப் புதிய அறுவை சிகிச்சைத் திட்டம் எடுத்துக்காட்டுகிறது.

இந்த வலிப்பு நோய் (எபிலெப்சி) அறுவை சிகிச்சைத் திட்டம் அப்போலோ பிரதான மருத்துவமனையிலும் [அப்போலோ மெயின் ஹாஸ்பிடல்] அப்போலோ புரோட்டான் புற்றுநோய் மையத்தின் [அப்போலோ புரோட்டோன் கேன்சர் சென்டர்] ஒருங்கிணைந்த வளங்கள் மூலமும் செயல்படுத்தப்படுகிறது. இது அதிநவீன நோயறிதல், நவீன அறுவை சிகிச்சை தொழில்நுட்பங்கள் கிடைத்தல் ஆகியவற்றை உறுதி செய்கிறது.

இந்த மையங்கள், 3டி எம்ஆர்ஐ, சவுண்ட் ப்ரூஃப்ட் வீடியோ இஇஜி சூட், பிஇடி சிடி ஸ்கேன் ஆகிய அதிநவீன மருத்துவ வசதிகளைக் கொண்டுள்ளன. இது துல்லியமான அறுவை சிகிச்சைக்கு முந்தைய மதிப்பீட்டை எளிதாக்குகிறது. இந்த சிகிச்சைத் திட்டம் மேம்பட்ட துல்லியத்தன்மை நரம்பியல் கண்காணிப்பு, உள்நோக்கிய அல்ட்ராசவுண்ட், உள்நோக்கிய எலக்ட்ரோ கார்டிகோகிராபி, உயர் துல்லிய செயல்பாட்டு நுண்ணோக்கி (ஆக்மென்டேட் ரியாலிட்டி எனேபில்ட் நியூரோ நேவிகேஷன், இன்ட்ரா ஆப்பரேட்டிவ் அல்ட்ரா சவுண்ட், இன்ட்ரா ஆப்பரேட்டிவ் எலக்ட்ரோ கார்டிகோகிராபி, ஹைய் பிரிசீசியன் ஆப்பரேட்டிவ் மைக்ரோஸ்கோப்) ஆகியவற்றை உள்ளடக்கியது. இது வலிப்பு நோய்ச் சிகிச்சையில் மிகவும் துல்லியமாக சிகிச்சை அளிப்பதை உறுதி செய்கிறது.

வலிப்பு மேலாண்மையில் சிறப்பு பயிற்சி பெற்ற மூத்த மருத்துவரும், நரம்பியல் அறுவை சிணீச்சை நிபுணருமான டாக்டர் அரவிந்த் சுகுமாரன், மூத்த நரம்பியல் மருத்துவ நிபுணர் டாக்டர் முத்துக்கனி உள்ளிட்ட புகழ்பெற்ற மருத்துவ நிபுணர்கள் குழுவால் இந்த சிகிச்சைத் திட்டம் வழிநடத்தப் படுகிறது. இந்த சிகிச்சைத் திட்டத்தில் வலிப்பு நோய்க்கு இதுவரை 15 அறுவை சிகிச்சைகள் வெற்றிகரமாக நடத்தப் பட்டுள்ளன. இன்ட்ரா ஆபரேடிவ் இஇஜி அல்லது எலக்ட்ரோ கார்டிகோகிராஃபி அறுவை சிகிச்சையின் துல்லியத்தை மேம்படுத்துகிறது. இந்த நிகழ்வுகளில், 13 நோயாளிகள் முழுமையாக வலிப்பு நோயில் இருந்து குணம் அடைந்து மீண்டுள்ளனர். இது வலிப்பு சிகிச்சையில் அப்போலோ மருத்துவமனையின் பல்துறை அணுகுமுறை செயல்திறனை எடுத்துக் காட்டுகிறது.

இந்த சிகிச்சைத் திட்டத்தை தொடங்கி வைத்து, அப்போலோ மருத்துவமனையின் மூத்த மருத்துவரும் நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணருமான டாக்டர் அரவிந்த் சுகுமாரன் [சீஹீயர் கன்சல்டண்ட் நியூரோ சர்ஜன், அப்போலோ ஹாஸ்பிடல்ஸ்] கூறுகையில், "சென்னை அப்போலோ மருத்துவமனையில் வலிப்பு நோய்க்கான அறுவை சிகிச்சையில் பல ஆண்டுகளாக குறிப்பிடத்தக்க நவீன முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இது மருந்து எதிர்ப்பு வலிப்பு நோயாளிகளுக்கு புதிய நம்பிக்கையை அளித்து வருகிறது. இந்த ஒருங்கிணைந்த அதிநவீன தொழில்நுட்பம், பல்துறை அணுகுமுறை ஆகியவற்றின் மூலம், அப்போலோ மருத்துவமனை இப்போது வலிப்பு நோயில் இருந்து முற்றிலும் குணம் அடைவதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கக் கூடிய வகையில் மிகவும் துல்லியமான சிகிச்சை நடைமுறைகளை மேற்கொள்கிறது. இந்த சிகிச்சைத் திட்டம் இந்தியாவில் வலிப்பு நோயை திறம்பட கையாள்வதில் அடுத்தக்கட்ட முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கிறது" என்றார்.

# சேப்பாக்கம் இரயில் நிலையம் அருகே சென்று கொண்டிருந்த நபரிடம் பணம் கேட்டு பாட்டிலால் தாக்கிய 2 இளஞ் சிறுவர்கள் சிறார் நீதிக்குழுமத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்

சென்னை, 15 பிப்ரவரி 2025: அடையாறு, கஸ்தூரிபாய் நகரில் வசித்து வரும் அர்ஜுன் தப்பா, வ/27, த/பெவூதி என்பவர் சென்னை, அடையாறிலுள்ள ஒரு ஓட்டலில் வேலை செய்து வருகிறார். அர்ஜுன் தப்பா கடந்த 12.02.2025 அன்று மாலை, மெரினா கடற்கரைக்கு செல்வதற்காக வந்தவர், சேப்பாக்கம் இரயில் நிலையம் அருகில் நடந்து சென்று கொண்டிருந்தபோது, அங்கு வந்த 2 வாலிபர்கள் அர்ஜுன் தப்பாவை வழிமறித்து அவரிடம் பணம் கேட்டுள்ளனர். அர்ஜுன் தப்பா பணம் தர மறுக்கவே, 2 வாலிபர்களும் அருகிலிருந்த காலி பாட்டிலை எடுத்து அர்ஜுன் தப்பாவின் தலையில் தாக்கி அவர் வைத்திருந்த செல்போனை பறிக்க முயன்றபோது, அர்ஜுன் தப்பா சத்தம் போடவே, பொதுமக்கள் வருவதை கண்டு 2 வாலிபர்களும் அங்கிருந்து தப்பியோடிவிட்டனர். இரத்தக் காயமடைந்த அர்ஜுன் தப்பா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின்னர் மேற்படி சம்பவம் குறித்து டி-6 அண்ணா சதுக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

டி-6 அண்ணா சதுக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி வழக்கில் தொடர்புடைய 17 வயது மற்றும் 13 வயதுடைய 2 இளஞ்சிறுவர்களிடம் விசாரணை செய்தனர். விசாரணைக்குப் பின்னர் இளஞ் சிறுவர்கள் இருவரும் 13.02.2025 அன்று சிறார் நீதிக்குழுமத்தில் ஆஜர் செய்யப்பட்டு, அரசு கூர்நோக்கு இல்லத்தில் சேர்க்கப்பட்டனர்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# இந்தியன் லைஃப் இன்சூரர்ஸ் ஜனவரி 2025 இல் புதிய வணிக புள்ளிவிவரங்களைப் பதிவு செய்துள்ளன; பிரீமியம் வசூல் 7.78% அதிகரித்துள்ளது.




சென்னை, 15 பிப்ரவரி 2025: ஆயுள் காப்பீட்டு கவுன்சில் ஜனவரி 2025க்கான புதுப்பிக்கப்பட்ட தொழில்துறை வணிக எண்களை வெளியிட்டுள்ளது, இது முக்கிய துறைகளில் நேர்மறையான போக்குகளை வெளிப்படுத்துகிறது.

இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களால் காப்பீடு செய்யப்பட்ட புதிய வணிக பிரீமியங்கள் (என்பிபிகள்) கடந்த ஆண்டு இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 7.78% ஒய்திடி வளர்ச்சியை அடைந்துள்ளன.

ஒய்திடி வசூல் இந்த ஆண்டு ரூ. 283833.52 கோடியிலிருந்து ரூ. 305912.09 கோடியாக அதிகரித்துள்ளது. ஆயுள் காப்பீட்டுத் துறையில் தனிநபர் ஒற்றை பிரீமியங்கள் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 16.26% அதிகரித்து, ஜனவரி'25 இல் ரூ. 4127.67 கோடியாக முடிவடைந்தது, ஒய்திடி வளர்ச்சி 14% ஆக இருந்தது. தனிநபர் ஒற்றை அல்லாத பிரீமியங்கள் ரூ. 10632.32 கோடியை எட்டின, இது ஜனவரி'25 இல் 10.52% அதிகரித்துள்ளது, மேலும் ஒய்திடி வசூல் கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தை விட 14% அதிகமாக இருந்தது.

ஆயுள் காப்பீட்டாளர்கள் முதல் முறையாக ஆயுள் காப்பீட்டு வாங்குபவர்களை அத்தியாவசிய ஆயுள் காப்பீட்டு தீர்வுகளை வாங்க ஊக்குவிப்பதில் அதிக கவனம் செலுத்துவதை இந்த வலுவான செயல்திறனுக்குக் காரணம் என்று கூறலாம், இது ஜனவரி 2025 மாதத்திற்கான ஒருங்கிணைந்த தனிநபர் பிரீமியம் வசூலில் 12.07% வளர்ச்சிக்கும், ஒய்திடி அடிப்படையில் 14% வளர்ச்சிக்கும் பங்களித்தது.

இந்தியாவில் ஆயுள் காப்பீட்டுத் துறை, காப்பீட்டு அணுகலை விரிவுபடுத்துவதன் மூலமும், காப்பீட்டுத் தேவைகளைப் பொறுத்தவரை முன்னர் குறைவாகவே இருந்த நாட்டின் ஈக்கள் தொகையின் பகுதிகள் மற்றும் பிரிவுகளைச் சென்றடைவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதன் மூலமும் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைச் செய்து வருகிறது. இந்த நோக்கத்திற்காக, ஆயுள் காப்பீட்டாளர்கள் 872055க்கும் மேற்பட்ட தனிப்பட்ட ஆயுள் காப்பீட்டு முகவர்களைச் சேர்த்துள்ளனர், ஒட்டு மொத்த முகவர்களின் எண்ணிக்கையில் ஒட்டு மொத்தமாக 4.82% வளர்ச்சியுடன். இருப்பினும், ஆயுள் காப்பீட்டாளர்களின் டிஜிட்டல் மயமாக்கலின் அதிக வேகத்தால் முகவர் சேர்க்கையின் நீடித்த வேகம் பூர்த்தி செய்யப்படுகிறது,

இது காப்பீட்டு ஊடுருவலில் கூடுதல் ஆதாயங்களுக்கு வழி வகுக்கிறது, இது எஃப்ஒய்25 மற்றும் அதற்குப் பிறகு புதிய வணிக பிரீமியங்களுக்கு குறிப்பிடத்தக்க ஊக்கத்தை அளிக்கும்,

# ஹெர்பாலைஃப் இந்தியா ஆனது வளர்ந்து வரும் கிரிக்கெட் நட்சத்திரமான யஷஸ்வி ஜெய்ஸ்வால் உடன் கூட்டாண்மை ஏற்படுத்தியுள்ளது



சென்னை, 15 பிப்ரவரி 2025: முன்னனி ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு நிறுவனம், சமூகம் மற்றும் தளமான ஹெர்பா லைஃப் இந்தியா ஆனது வளரும் கிரிக்கெட் நட்சத்திரமான யஷஸ்வி ஜெய்ஸ்வால் உடன் கூட்டாண்மை மேற்கொள்வதை பற்றி பெருமையுடன் அறிவித்துள்ளது. இந்த கூட்டுறவு ஆனது இந்தியாவில் ப்ரீமியம் ஸ்போர்ட்ஸ் ஊட்டச்சத்து மூலம் விளையாட்டு வீரரின் செயல்திறனை மேம்படுத்தும் ஹெர்பாலைஃபின் அர்பணிப்பிற்கு மெருகூட்டுகிறது.

சென்ற சில வருடங்களாக ஹெர்பாலைஃப் ஆனது முன்னனி விளையாட்டு வீரர்களின் உறுதியான ஆதரவாளராக இருந்து வருகிறது மற்றும் அவர்கள் பிரமாண்டமான வெற்றிகளை குவிப்பதற்கு தேவையானஊட்டச்சத்து கருவிகளை வழங்கி வருகிறது. ஜெய்ஸ்வால் உடனான இந்த கூட்டுறவானது

நல்லாரோக்கியம் மற்றும் சமூக ஈடுபாடு ஆகியவற்றை மேம்படுத்தும் விளையாட்டுக்களின் ஆற்றலின் ணிது ஹெர்பாலைஃப் கொண்டுள்ள நம்பிக்கையை கோடிட்டு காட்டுகிறது.

உத்தரப் பிரதேசத்தின் ஒரு சிறு நகரத்திலிருந்து தொடங்கிய ஜெய்ஸ்வாலின் ஊக்கமளிக்கும் பயணமானது அவரது மீள்தன்மைக்கும் அர்பணிப்புக்கும் ஒரு எடுத்துக்காட்டாகும். தனது கிரிக்கெட் வாழ்க்கையை வெறும் பத்து வயதில் தொடங்கிய அவர் எண்ணற்ற சவால்களை எதிர்கொண்டார் எனவே அவர் ஆர்வமுள்ள விளையாட்டு வீரர்களுக்கு ஒரு ரோல் மாடலாக விளங்குகிறார். இந்த கூட்டுறவானது நல்வாழ்வை ஊக்கப்படுத்துகின்ற மற்றும் நேர்மறையான மாற்றத்தை உந்துசெலுத்துகின்ற பகிரப்படும் கண்ணோட்டத்தை பிரதிபலிக்கிறது.

ஹெர்பாலைஃப் இந்தியாவின் நிர்வாக இயக்குனரான அஜய் கன்னா கூறுகையில், "கடின உழைப்பு மற்றும் சிறப்புத் தன்மையின் பிரதிநிதியாக விளங்கும் யஷஸ்வி ஜெய்ஸ்வாலுடன் நாங்கள் கூட்டுறவு கொள்வதில் மிகவும் மகிழ்கிறோம்.

அவருடைய பயணமானது நாங்கள் ஹெர்பாலைஃபில் போற்றுகின்ற உறுதிப்பாட்டை காட்டுகிறது. நாங்கள் இந்தியாவில் எங்கள் 25வது ஆண்டு நிறைவை கொண்டாடுகையில் இப்பயணமானது உகந்த ஊட்டச்சத்து மூலம் விளையாட்டு வீரர்களுக்கு ஆற்றல் வழங்கும் எங்கள் வளர்ச்சி மற்றும் வெற்றியை பிரதிபலிக்கிறது. எங்கள் அறிவியல்-சார்ந்த தயாரிப்புகள் மற்றும் நிபுணத்துவமிக்க ஆதரவு ஆகியன தங்களின் மிக சிறந்த செயல்பாட்டிற்காக விளையாட்டு வீரர்களுக்கு இன்றியமையாதவை என்று நாங்கள் நம்புகிறோம். யஷஸ்வியுடன் இணைந்து நாங்கள் இந்தியா முழுதுமுள்ள இளம் விளையாட்டு வீரர்கள் தங்கள் கனவுகளை பின்பற்றவும் ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை வழங்கவும் ஊக்கமளிக்க நோக்கம் கொண்டுள்ளோம்," என்று விளக்கினார்.

யஷஸ்வி ஜெய்ஸ்வால் கூறுகையில், "ஹெர்பாலைஃபின் ஊட்டச்சத்து மற்றும் நல்வாழ்வின் பயணத்தில் ஒரு அங்கமாக இருப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஞச்சக் கட்ட செயல் திறனையும் நீடித்த தன்மையையும் பராமரிப்பதில் விளையாட்டு வீரர்களுக்கு உதவ ஊட்டச்சத்துக்கான அணுகல் என்பது முக்கியமாகும். இவ்வகையில் நான் ஹெர்பாலைஃபுடன் கூட்டுறவை பேணுவதில் பேருவகை கொள்கிறேன். அவர்கள் ஊட்டச்சத்து ஆதரவு வழங்குவது மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த நல்வாழ்விற்கும் ஊக்கமளிக்கின்றனர்,

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# டிரைடென்ட் ஆர்ட்ஸ் ஆர். ரவீந்திரன் தயாரிப்பில் கிஷோர் குமார் இயக்கத்தில் சனந்த், மடோனா செபாஸ்டியன், இமயா நடிக்கும் காதல்-நகைச்சுவை (ரோம்-காம்) திரைப்படம் 'ஹார்ட்டின்'

சென்னை, 15 பிப்ரவரி 2025: துடிப்புமிக்க இளம் திறமைகளை அடையாளம் கண்டு அவர்கள் மீது வெளிச்சம் பாய்ச்சும் டிரைடென்ட் ஆர்ட்ஸ் ஆர். ரவீந்திரன் தயாரிப்பில் உருவாகி வரும் புதிய திரைப்படம் 'ஹார்ட்டின்'.




தலைப்புக்கேற்றார் போல் இளமை ததும்பும் ஃபீல் குட் படமாக தயாராகி வரும் 'ஹார்ட்டின்' திரைப்படத்தை அறிமுக இயக்குநர் கிஷோர் குமார் இயக்குகிறார்.

'மகான்', 'பேட்ட', 'ஜில் ஜங் ஜக்' புகழ் சனந்த் இப்படத்தில் நாயகனாக நடிக்க மடோனா செபாஸ்டியன் மற்றும் புதுமுகம் இமயா நாயகிகளாக நடிக்கின்றனர். பிரபல நடிகர்கள் இதர முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர்.

ஆர்ட்டின் திரைப்படம் குறித்து பேசிய இயக்குநர் கிஷோர் குமார், "ரோம்-காம் என்று சொல்லப்படும் நகைச்சுவை கலந்த காதல் கதை இது. அனைத்து ரசிகர்களுக்கும் பிடிக்கும் வகையில் உருவாக்கி வருகிறோம். 80 சதவீத படப்பிடிப்பு நிறைவடைந்து விட்டது. சென்னை, ஜெய்ப்பூர் மற்றும் ஊட்டி உள்ளிட்ட இடங்களில் படப்பிடிப்பு நடைபெற்றது. 2025 கோடை விடுமுறைக்கு 'ஹார்ட்டின்' படத்தை வெளியிட திட்டமிட்டுள்ளோம்," என்று தெரிவித்தார்.

இந்த திரைப் படத்திற்கு 'சுழல்' இணையத் தொடர் மற்றும் 'கொலைகாரன்' புகழ் முகேஸ் ஒளிப்பதிவு செய்துள்ளார். 'நேரம்', 'பிரேமம்', 'கோல்டு' உள்ளிட்ட சூப்பர் ஹிட் மலையாள படங்களுக்கு இசையமைத்த ராஜேஷ் முருகேசன் இசையமைக்கிறார்.

படத்தொகுப்பை 'குட் நைட்' மற்றும் 'லவ்வர்' புகழ் பரத் விக்ரமன் கையாள, கலை இயக்கத்தை ஜி துரைராஜ் ('கருடன்', 'அயோத்தி' புகழ்) மேற்கொண்டுள்ளார். 'விடுதலை 2' மற்றும் 'வெந்து தணிந்தது காடு' உள்ளிட்ட படங்களின் ஞாதாபாத்திரங்களுக்கு ஆடைகளை வடிவமைத்த உத்தரா மேனன் 'ஹார்ட்டின்' படத்தின் ஆடை வடிவமைப்பாளர் ஆவார்.

திறமைமிக்க கலைஞர்களின் பங்களிப்போடு டிரைடென்ட் ஆர்ட்ஸ் ஆர். ரவீந்திரன் யூயாரிப்பில் கிஷோர் குமார் இயக்கத்தில் சனந்த், மடோனா செபாஸ்டியன், இமயா நடிப்பில் உருவாகி வரும் 'ஹார்ட்டின்' படத்தின் படப்பிடிப்பு இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

# சாம்சங் ஆனது தனித்துவமிக்க சமுதாயம் வழிநடத்தும் திட்டமான "கேலக்சி எம்பவர்ட்" ஐ 2025 க்குள் 20,000 ஆசிரியர்களுக்கு திறன் மேம்பாட்டிற்காக அறிமுகப்படுத்துகிறது

சென்னை, 15 பிப்ரவரி 2025: இந்தியாவின் மிகப்பெரிய கன்ஸ்யூமர் எலெக்ட்ரானிக்ஸ் பிரான்டான சாம்சங் ஆனது கல்வித் துறையின் ஆசிரியர்கள், முதல்வர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு ஆற்றல் வழங்கி இந்தியாவில் கல்வியை உருமாற்றம் செய்யும் வகையில் வடிவமைக் கப்பட்ட ஒரு தனித்துவமிக்க சமுதாயம் வழிநடத்தும் திட்டமான "கேலக்சி எம்பவர்ட்" இன் அறிமுகத்தை அறிவித்துள்ளது.




புகழ்பெற்ற துப்பாக்கி சுடும் வீரர் மற்றும் 2008 ஒலிம்பிக் தங்கப்பதக்க வீரரான அபினவ் பிந்த்ராவின் முன்னிலையில் அறிமுகப் படுத்தப்பட்ட இந்த முன்னெடுப்பானது ஆக்கப்புத்தாக்கத்தின் கலாச்சாரத்தை கட்டமைக்கவும் தொழில்நுட்பத்தை கல்வி போதித்தல் வழிமுறைகளில் ஒருங்கிணைத்து கல்வியில் ஆக்கப்புத்தாக்கத்தை உந்து செலுத்தவும் நோக்கம் கொண்டது. இது மீண்டும் மீண்டும் நிகழும் நேரடி மற்றும் ஆன்லைன் கற்றல் நிகழ்வுகள் மூலம் ஆசிரியர்களை நாளைய வகுப்புகளுக்காக தயார்படுத்தும். சாம்சங் ஆனது தொழில்நுட்பத்தில் ஒரு சர்வதேச முன்னனி நிறுவனம் என்ற வகையில் ஆசிரியர்கள் மிக சமீபத்திய தொழில்நுட்பம் மற்றும் நவீன போதனை முறைகளை தழுவும் வகையில் எதிர்காலத்திற்காக தயாராக இருக்கின்ற வகுப்பறைகளை உருவாக்கி கல்வியின் எதிர்காலத்தை வடிவமைக்கும் நோக்கத்திற்காக தன்னை அர்பணித்துகொண்டுள்ளது.

"கேலக்சி எம்பவர்ட்" ஆனது கல்வியாளர்களுக்கு மட்டும் நன்மை பயப்பதல்ல. இது கல்வி ஆக்கப் புத்தாக்கத்தில் தலைவர்களாவதற்கு பள்ளிகளுக்கும் ஆதரவை வழங்குகிறது. போதனை வழிமுறைகளை

மேம்படுத்தியும் தொழில்நுட்பத்தால் உந்தப்பட்ட கற்றல் சுற்றுசூழல்களை உருவாக்கியும் பள்ளிகள் ஆனவை பெற்றோர்களிடையே பிரபலமான விருப்பத்தேர்வுகளாக தங்களை

நிலைநிறுத்த முடியும் மற்றும் தங்கள் மதிப்பை மேம்படுத்தலாம் மற்றும் சமூகத்தில் அந்தஸ்தை பெறலாம். கூடுதலாக "கேலக்சி எம்பவர்ட்" திட்டமானது ஆசிரியர்கள் மற்றும் பள்ளிகளுக்கு இலவசமானது என்பதால் இது எவ்வித நிதிசார் தடைகள் இன்றி கல்வி மேம்பாட்டுக்காக விழுமியமிக்க வளங்கள் இருப்பதை உறுதிபடுத்துகிறது.

"நாங்க "கேலக்சி எம்பவர்ட்" இன் உதவியால் மாணவர் ஈடுபாட்டை மேம்படுத்தவும் நிரந்தரமான கல்விசார் தாக்கத்தை உருவாக்கவும் ஆசிரியர்களுக்கு கருவிகளை வழங்குகிறோம். ஆசிரியர் மேம்பாட்டில் முதலீடு செய்வதன் மூலம் சாம்சங் ஆனது கல்வியாளர்கள் தங்கள் வகுப்பறை தாக்கத்தை அதிகப்படுத்த அவர்களுக்கு ஆற்றல் வழங்குகிறது மற்றும் கல்வி அமைப்பின் முதுகெலும்பிற்கு ஆதரவு வழங்குகிறது. இந்த முன்னெடுப்பானது ஒரு சிறந்த நாளைய தினத்திற்காக ஆக்கப்புத்தாக்கம் செய்வது என்ற னுங்கள் தொலைநோக்கு பார்வையுடன் இணங்குகிறது மற்றும் கல்வியானது ஆக்கப்புத்தாக்கத்தின் முன்னனியில் உள்ளது மற்றும் ஒவ்வொரு கல்வியாளரும் வெற்றி பெறுவதற்கான ஆதாரங்களை கொண்டுள்ளார் என்பனவற்றை உறுதிபடுத்துகிறது," என்று சாம்சங் இந்தியாவின் எம்எக்ஸ் வர்த்தகத்தின் மூத்த துணை தலைவரான ராஜு புல்லான் விளக்கினார்.

2,700க்கும் மேலான ஆசிரியர்களுக்கு இந்தியா முழுதும் டிசம்பர் 2024 முதல் "கேலக்சி எம்பவர்ட்" இன் ஒரு குடைக்குள் நேரடி பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டமானது 2025 க்குள் இந்தியா முழுதுமுள்ள 20,000 ஆசிரியர்களுக்கு ஆற்றல் வழங்கும் நோக்கத்தை கொண்டுள்ளது. டெல்லி கட்டத்திற்கு சாம்சங் ஆனது 250 பள்ளிகளில் வெற்றிகரமாக இந்த "கேலக்சி எம்பவர்ட்" திட்டத்தை நடத்தியுள்ளது. மகாதத்வா கல்வி ஆலோசக நிறுவனம் மற்றும் ஷிஜிஜிகிஸி உடன் முதல் கட்டத்தில் கூட்டாண்மை மேற்கொண்ட பின் இத்திட்டம் முழுதும் ஆசிரியர்களுக்கு உதவ சிறப்பு பயிற்சியாளர்கள் மற்றும் கல்வியாளர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

"கல்வி என்பது சமூக முன்னேற்றத்தின் மையத்தில் உள்ளது மற்றும் சாம்சங் ஆனது வகுப்பறையில் தொழில்நுட்பத்தின் முழு ரூன்மையை ஆசிரியர்கள் அடைய அவர்களுக்கு சரியான கருவிகளையும் ஆதரவையும் வழங்குவதன் முக்கியத்துவத்தை பற்றி உணர்ந்துள்ளது. ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு ஆற்றல் வழங்குவதன் மூலம் சாம்சங் ஆனது தொழில்நுட்பம் என்பது கற்றலை மேம்படுத்துகின்ற, இடைவெளிகளை குறைக்கின்ற மற்றும் கல்வியின் னுதிர்காலத்தை தீர்மானிக்கின்ற ஒரு சுற்றுசூழலை பேணுகின்றது. இந்த முன்னெடுப்பானது பெரிய அளவில் சிறந்த கற்றல் அனுபவங்களை நமது கல்வியாளர்கள் வழங்க உதவ அவர்களுக்கு மேலதிக திறன்களை வழங்குவதில் ஒரு படிகல்லாக அமையும் என்று நான் நம்புகிறேன்," என்று முக்கிய விருந்தினரும் 2008 ஒலிம்பிக் தங்கப்பதக்க வீரருமான அபினவ்

# டிபிஎஸ் வங்கி இந்தியா கோயம்புத்தூரில் நிகர செல்வ மதிப்பு அதிகமுள்ள பிரிவினருக்கு சேவை வழங்குவதற்காக புதிய பிரத்தியேக கிளையைத் தொடங்கியுள்ளது.

கோயம்புத்தூர், 15 பிப்ரவரி 2025: டிபிஎஸ் வங்கி இந்தியா [டிபிஎஸ் பேங்க் இந்தியா], கோயம்புத்தூரில் தனது புதிய பிரத்தியேக கிளையை தொடங்குவதாக அறிவித்துள்ளது. கோயம்புத்தூர் அவினாசி சாலையில் அமைந்துள்ள இந்த பிரத்தியேக கிளை, இம்மாநகரத்தில் டிபிஎஸ் வங்கி இந்தியாவின் பதினாறாவது கிளை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த கிளையில் நிகர சொத்து மதிப்பு அதிகமுள்ள (ஹைய் நெட் வொர்த் (ஹெச்என்ஐ)) வாடிக்கையாளர்கள் மற்றும் சிறு நடுத்தர நிறுவனங்கள் (எஸ்எம்இஸ்) மற்றும் பெருநிறுவனங்களுக்கு சேவைகள் கிடைக்கும். ஒரு பிரீமியம் கிளை என்ற அடிப்படையில் இது டிபிஎஸ் ட்ரெஷர்ஸ் [டிபிஎஸ் டிரெஷர்ஸ்] சேவையின் மூலம் வெளிநாடு வாழ் இந்தியர்கள் [என்ஆர்ஐ] மற்றும் தனியார் வங்கி வாடிக்கையாளர்களுக்கும் வங்கிச்சேவைகளை வழங்குகிறது. வெகு சமீபத்தில் டிபிஎஸ் ட்ரெஷர்ஸ் சேவை, தனிப்பயனாக்கப்பட்ட நன்மைகள் மற்றும் வெவ்வேறு சந்தைகளில் இருக்கும் நாடுகளிலும்




கிடைக்கும் தீர்வுகள் என பல்வேறு அம்சங்களால் மேம்படுத்தப் பட்டுள்ளது.

ஜவுளி, பொறியியல் மற்றும் வாகனத் தொழில் துறைகளுக்கான முக்கிய மையமாக கோயம்புத்தூர் திகழ்கிறது. இதன் தொடர்ச்சியாக, நடப்புக் கணக்கு சேவைகள், வர்த்தகம் மற்றும் எஃப்.எக்ஸ் தீர்வுகள் மற்றும் மூலதன வசதிகள் [கரண்ட் அக்கவுண்ட் சர்வீசஸ், டிரேட், எஃப்எக்ஸ் சொல்யூஷன்ஸ், வொர்க்கிங் கேபிடல் பெசிலிட்டீஸ் ] என பல்வேறு சேவைகளை உள்ளடக்கிய விரிவான போர்ட்ஃபோலியோவுடன் சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் [எஸ்எம்இ] - வாடிக்கையாளர் தளத்தை விரிவுபடுத்தும் வாய்ப்புகள் கொண்ட நகரமாகவும் கோயம்புத்தூர் இருப்பதால், இது டிபிஎஸ் வங்கி இந்தியாவிற்கு ஒரு முக்கிய சந்தையாக இருந்து வருகிறது. தென்கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய வங்கியாகத் திகழும் டிபிஎஸ் உருவாக்கியுள்ள பரவலான ஆசிய வலையமைப்பை, ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்கள் உட்பட வணிக உரிமையாளர்கள் கூடுதலாக பயன்படுத்திக் கொள்ளலாம். பெரும் வளர்ச்சிக்கண்டு வரும் கோயம்புத்தூரின் ரியல் எஸ்டேட் சந்தையின் அடிப்படையில் சொத்துகள் மீதான வாடிக்கையாளர் கடன் திட்டம் [கன்ஸ்யூமர் லோன் அகெனெஸ்ட் பிராப்பர்டி (சிஎல்ஏபி)] இந்நகரின் வணிக வாடிக்கையாளர்களுக்கு பெரும் வசதியாக அமையும். இத்திட்டம் தங்களது வசிப்பிடம் மற்றும் வணிக சொத்துக்களை அடமானம் வைத்து கடன் வாங்கும் சிறு வணிகர்களின் அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்ய உதவும் முக்கிய திட்டமாகும். பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்கள் வசிக்க விரும்பும் நகரமாக கோயம்புத்தூர் நல்ல வரவேற்பைப் பெற்று வருவதாக கூறப்படும் நிலையில், இந்த வாடிக்கையாளர்களுக்காகவே டிபிஎஸ் வங்கி இந்தியா தனது 'டிபிஎஸ் கோல்டன் சர்க்கிள்' சேவையை அவர்களுக்கேற்ற வகையில் தனிப்பயனாக்கப்பட்ட அம்சங்களுடன் வழங்கி வருகிறது. பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய இச்சேவை, அதிக வைப்பு விகிதங்கள், பாதுகாப்பு பெட்டக சேவை மீதான தள்ளுபடி கட்டணங்கள் மற்றும் பிற தயாரிப்புகள் [ஹைய்யர் டெபாசிட் ரேட்ஸ், டிஸ்கவுண்ட்ஸ் ஆன் லாக்கர்ஸ், அதர் பிராடெக்ஸ்] போன்ற பல்வேறு அம்சங்களுடன் வயதான மூத்த குடிமக்களின் குறிப்பிட்ட தேவைகளை மனதில் கொண்டு பிரத்தியேகமாக வடிவமைக் கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தில் சுகாதாரப் பராமரிப்பு சலுகைகள், சைபர் காப்பீட்டுப் பாதுகாப்பு, வாரத்தில் 24 மணி நேரமும் இயங்கும் 24*7 வங்கி உதவி எண் மற்றும் பிற முன்னுரிமை சேவைகளும் [ஹெல்த்கேர் பெனிஃபிட்ஸ், சைபர் இன்சூரன்ஸ் புரொடக்ஷன், 24*7 பேங்கிங் ஹெல்ப்லைன் ] அடங்கியுள்ளன.

# சென்னை, எழிலக கட்டிடத்தில் வெடிகுண்டு வைத்துள்ளதாக காவல் கட்டுப்பாட்டறைக்கு மிரட்டல் விடுத்த நபர் கைது.

சென்னை 15, பிப்ரவரி 2025: கடந்த 12.02.2025 அன்று மாலை, காவல் கட்டுப்பாட்டறையின் தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு பேசிய நபர் ஒருவர் சென்னை, சேப்பாக்கம், எழிலகம் கட்டிடத்தில் வெடிகுண்டு வைத்துள்ளதாக கூறி, இணைப்பை துண்டித்துள்ளார். இது குறித்து தகவலறிந்த ஞ-6 அண்ணா சதுக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர்,



வெடிகுண்டு கண்டுபிடிப்பு மற்றும் செயலிழத்தல் பிரிவு (பிடிடிஎஸ்) மற்றும் காவல் மோப்ப நாய் பிரிவினருடன் ஒருங்கிணைந்து, எழிலக கட்டிட வளாகம் முழுவதும் சோதனைகள் மேற்கொண்டதில் வெடிகுண்டு எதுவும் இல்லை எனத் தெரிய வந்தது. இது குறித்து டி-6 அண்ணா சதுக்கம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற் கொள்ளப் பட்டது.

டி-6 அண்ணா சதுக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர், வெடிகுண்டு மிரட்டல் விடுத்த நபரின் செல்போன் எண்ணை வைத்து தீவிர விசாரணை மேற்கொண்டு, வெடிகுண்டு மிரட்டல் விடுத்த பாலாஜி, வ/42, த/பெ.வெங்கடேசன், ராமசாரியார் தெரு, கொசப்பேட்டை, வேலூர் மாவட்டம் என்பவரை 13.02.2025 அன்று கைது செய்தனர். அவரிடமிருந்து குற்றச் செயலுக்கு பயன்படுத்திய 1 செல்போன் பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப் பட்ட எதிரி பாலஜி விசாரணைக்குப் பின்னர் 13.02.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
சனி, பிப்ரவரி 15, 2025

# சாம்சங் இந்தியாவில் அதன் மிகவும் மலிவு விலை 5 ஜி ஸ்மார்ட் போனான கேலக்ஸி எஃப் 06 5 ஜி ஐ அறிமுகப்படுத்துகிறது




கோயம்புத்தூர், 15 பிப்ரவரி 2025: இந்எஃப்யாவின் மிகப்பெரிய நுகர்வோர் எலக்ட்ரானிக்ஸ் பிராண்டான சாம்சங், இந்எஃப்யாவில் அதன் மிகவும் மலிவு விலையில் 5ஜி ஸ்மார்ட்போனான கேலக்ஸி எஃப்06 5ஜி ஐ அறிமுகப்படுத்துவதாக இன்று அறிவித்தது. கேலக்ஸி எஃப்06 5ஜி ஆனது உயர் செயல்எஃப்றன் மற்றும் பாணியின் சரியான கலவையுடன் 5ஜி பிரிவில் புரட்சியை ஏற்படுத்த அமைக்கப்பட்டுள்ளது. கேலக்ஸி எஃப்06 5ஜி ஆனது மலிவு விலையில் முழுமையான 5ஜி அனுபவத்தை வழங்கும், மேலும் 5 ஜி தொழில்நுட்பத்தை அதிக நுகர்வோருக்கு அணுகக்கூடியதாக ஆக்குகிறது மற்றும் நாடு முழுவதும் அதன் பரவலான தத்தெடுப்பை துரிதப்படுத்துகிறது. கேலக்ஸி எஃப்06 5ஜி அனைத்து தொலைத் தொடர்பு ஆபரேட்டர்களிலும் 12 5ஜி பேண்டுகளை ஆதரிக்கிறது.

"னுங்கள் மிகவும் மலிவு விலையில் 5 ஜி ஸ்மார்ட்போனை அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறோம், இது அடுத்த தலைமுறை இணைப்பை அனைவருக்கும் அணுகக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஞோலக்ஸி எஃப்06 5ஜி இன் வெளிஎஃப்டு டிஜிட்டல் பிளவைக் குறைப்பதற்கும், மில்லியன் கணக்கான நுகர்வோருக்கு முழுமையான 5ஜி அனுபவம், சிறந்த செயல்திறன் மற்றும் ரூ .9499 முதல் அறிமுக விலையில் அனைத்து புதிய ஸ்டைலான வடிவமைப்பையும் மேம்படுத்துவதற்கான எங்கள் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது. கேலக்ஸி எஃப் 06 5 ஜி மூலம், நாங்கள் ஒரு ஸ்மார்ட்போனை மட்டுமல்ல, ஒவ்வொரு இந்தியருக்கும் புதிய வாய்ப்புகளை அறிமுகப் படுத்துகிறோம் "என்று சாம்சங் இந்தியாவின் எம்எக்ஸ் வணிகத்தின் யொது மேலாளர் அக்ஷய் எஸ் ராவ் கூறினார்.

முழு 5ஜி அனுபவம் கேலக்ஸி எஃப்06 5ஜி ஆனது அனைத்து தொலைத் தொடர்பு ஆபரேட்டர்களிலும் 12 5ஜி பேண்டுகளை ஆதரிக்கும் ஒப்பிடமுடியாத இணைப்பை வழங்குவதற்காக கட்டமைக்கப்பட்டுள்ளது. வேகமான பதிவிறக்கம் மற்றும் பதிவேற்ற வேகத்தை வழங்க இது கேரியர் அக்ரிகேஷன் உடன் வருகிறது. கேலக்ஸி எஃப்06 5ஜி ஆனது மென்மையான லைவ் ஸ்ட்ரீமிங் மற்றும் வீடியோ அழைப்பு அனுபவத்தை வழங்க இயக்கப்பட்டுள்ளது.

முற்றிலும் புஎஃப்ய வடிவமைப்பு மற்றும் டிஸ்பிளே - கேலக்ஸி எஃப்06 5ஜி ஆனது 'ரிப்பிள் க்ளோ' பூச்சைக் கொண்டுள்ளது, இது ஒவ்வொரு அசைவிலும் நேர்த்தியையும் நுட்பத்தையும் வெளிப்படுத்துகிறது. 6.7 நிட்ஸ் பிரகாசத்துடன் 800" பெரிய ஹெச்டி டிஸ்ப்ளேவைக் கொண்டுள்ளது, கேலக்ஸி எஃப்06 5ஜி நுகர்வோருக்கு அதிர்ச்சியூட்டும் காட்சிகள் மற்றும் உயர்ந்த பார்வை அனுபவத்தை வழங்குகிறது. ஸ்மார்ட்போன் 8 மிமீ நேர்த்தியானது மற்றும் 191 கிராம் எடை மட்டுமே கொண்டது, இது பயன்படுத்த நம்பமுடியாத பணிச்சூழலியல் ஆகும். கேலக்ஸி எஃப்06 5ஜி ஆனது பஹாமா ப்ளூ மற்றும் லிட் வயலட் ஆகிய இரண்டு தைரியமான மற்றும் மயக்கும் வண்ணங்களில் வாங்க கிடைக்கும். ஞோரமரா - கேலக்ஸி எஃப்06 5ஜி ஆனது ஒரு புதிய கேமரா டெகோவைக் கொண்டுள்ளது. எஃப்1.8 துளை கொண்ட உயர்-தெளிவுத்திறன் கொண்ட 50எம்பி வைட்-ஆங்கிள் லென்ஸ் துடிப்பான, விரிவான புகைப்படங்களைப் பிடிக்கிறது, அதே நேரத்தில் 2எம்பி ஆழம்-உணர்திறன் கேமரா மேம்பட்ட தெளிவுடன் படங்களை வழங்குகிறது. 8எம்பி முன் கேமரா உங்கள் செல்ஃபிக்கள் மிருதுவாகவும் தெளிவாகவும் இருப்பதை உறுதி செய்கிறது.

கேலக்ஸி எஃப்06 5ஜி ஆனது மீடியா டெக் டி 6300 ஆல் இயக்கப்படுகிறது, இது 416கே வரை ஏஎன்தியுதியு மதிப்பெண்ணைக் கொண்ட பிரிவின் சிறந்த செயலிகளில் ஒன்றாகும், இது வேகமாகவும் ஆற்றல் திறனுடனும் செயல்படுகிறது, இது பல பணிகளை சீராக செய்ய உங்களை அனுமதிக்கிறது. கேலக்ஸி எஃப்06 5ஜி ஆனது உயர்தர ஆடியோ மற்றும் காட்சிகளுடன் அதிவேக இணைப்புடன் விரைவான மொபைல் கேமிங் அனுபவத்தை வழங்குகிறது.

பேட்டரி & ஃபாஸ்ட் சார்ஜிங் - கேலக்ஸி எஃப்06 5ஜி ஆனது 5000எம்ஏஹெச் பேட்டரியை பேக் செய்கிறது, இது நீண்ட அமர்வுகளாக உலாவுதல், கேமிங் மற்றும் அதிகப்படியான பார்ப்பை செயல்படுத்துகிறது. கேலக்ஸி எஃப்06 5ஜி பயனர்கள் தடையின்றி இணைந்திருக்கவும், பொழுதுபோக்கு மற்றும் உற்பத்தி செய்யவும் அனுமதிக்கிறது. கேலக்ஸி எஃப்06 5ஜி பிரிவில் முன்னணி 25டபிள்யு ஃபாஸ்ட் சார்ஜிங்கை ஆதரிக்கிறது, குறைந்த நேரத்தில் அதிக சக்தியை வழங்குகிறது.

கேலக்ஸி அறக்கட்டளை - கேலக்ஸி எஃப்06 5ஜி உடன் 4 தலைமுறை ஓஎஸ் மேம்படுத்தல்கள் மற்றும் 4 வருட பாதுகாப்பு புதுப்பிப்புகளை வழங்குவதன் மூலம் வாடிக்கையாளர் திருப்திக்கான தனது உறுதிப்பாட்டை சாம்சங் மீண்டும் உறுதிப்படுத்துகிறது, பயனர்கள் பல ஆண்டுகளாக சமீபத்திய அம்சங்களையும் மேம்பட்ட பாதுகாப்பையும் அனுபவிக்க முடியும் என்பதை ஞறுதி செய்கிறது.

பல்பணி & கேமிங் - கேலக்ஸி எஃப்06 5ஜி சாம்சங்கின் மிகவும் புதுமையான பாதுகாப்பு அம்சங்களில் ஒன்றைக் கொண்டிருக்கும்:

சாம்சங் நாக்ஸ் வால்ட். வன்பொருள் அடிப்படையிலான பாதுகாப்பு அமைப்பு வன்பொருள் ஊற்றும் மென்பொருள் தாக்குதல்களுக்கு எதிராக விரிவான பாதுகாப்பை வழங்குகிறது. கூடுதலாக, கேலக்ஸி எஃப்06 5ஜி ஆனது தெளிவான அழைப்பு அனுபவத்திற்காக சுற்றுப்புற இரைச்சலைக் குறைக்கும் வாய்ஸ் ஃபோகஸ் மற்றும் விரைவான பகிர்வு அம்சம் போன்ற புதுமைகளுடன் நுகர்வோர் அனுபவத்தில் புரட்சியை ஏற்படுத்த அமைக்கப்பட்டுள்ளது, இது பயனர்கள் கோப்புகள், புகைப்படங்கள் மற்றும் ஆவணங்களை வேறு எந்த சாதனத்துடனும் உடனடியாக பகிர உதவுகிறது, அவை தொலைவில் இருந்தாலும் கூட, உங்கள் மடிக்கணினி மற்றும் தாவல் உட்பட.,

# ஆர்கா ஏஐ, லாங்கிவிட்டி இந்தியா, ஐஐஎஸ்சி, பெங்களூரு மற்றும் பிலீவர்ஸ் சர்ச் மருத்துவக் கல்லூரி இடையே மூலோபாய கூட்டாண்மை




சென்னை, 15 பிப்ரவரி 2025: செயற்கை நுண்ணறிவு சார்ந்த சுகாதாரப் பராமரிப்பு தீர்வுகளில் தொலைநோக்கு பார்வை கொண்ட ஆர்கா ஏஐ நிறுவனம், நோயாளி பராமரிப்பு, மருத்துவக் கல்வி மற்றும் நீண்ட ஆயுள் ஆராய்ச்சியை நோக்கமாகக் கொண்ட இரண்டு புரட்சிகரமான ஒத்துழைப்புகளை அறிவித்துள்ளது. லாங்கிவிட்டி இந்தியா, ஐஐஎஸ்சி, பெங்களூரு மற்றும் கேரளாவின் பிலீவர்ஸ் சர்ச் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையுடனான கூட்டாண்மைகள், சுகாதாரம் மற்றும் அறிவியல் ஆராய்ச்சியில் ஒரு அதிநவீன தொழில்நுட்பத்தைக் குறிக்கின்றன.

இந்த ஒத்துழைப்பு மூலம் இந்திய அறிவியல் நிறுவனம் ஐஐஎஸ்சி-ஆல் தொகுக்கப்பட்ட லாங்கிவிட்டி இந்தியாவின் முக்கிய தொழில்நுட்ப கூட்டாளியாக ஆர்கா ஏஐ இருக்கும், உயிரி குறிப்பான்களைக் கண்காணிக்கவும், மரபணு மற்றும் வாழ்க்கை முறைகளை பகுப்பாய்வு செய்யவும், இந்தியாவின் ஆரோக்கியமான முதுமை முன்னேற்றங்களுக்கு பங்களிக்கக் கூடிய முன்கணிப்பு மாதிரிகளை உருவாக்கவும் ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு வலுவான தளத்தை வழங்குவதே இதன் குறிக்கோள் ஆகும்.

செயற்கை நுண்ணறிவு, இயந்திர கற்றல், ஆழமான கற்றல், பகுப்பாய்வு மற்றும் கிளவுட் கம்ப்யூட்டிங் ஆகியவற்றில் ஆர்கா ஏஐ-இன் நிபுணத்துவத்துடன், லாங்விட்டி இந்தியா, பரந்த அளவிலான ஆராய்ச்சி தரவை திறமையாக செயலாக்குவதற்கும் விளக்குவதற்கும் மேம்பட்ட கருவிகளைக் கொண்டிருக்கும்.

கூட்டாட்சி கற்றலுக்காக நோக்கமாகக் கொண்ட தரவு மற்றும் பகுப்பாய்வு, பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனத்தில் சேமிக்கப்படும்.

"ஆர்கா ஏஐ உடனான எங்கள் ஒத்துழைப்பு, முதுமை மற்றும் நீண்ட ஆயுளின் சிக்கல்களைப் புரிந்துகொள்வதற்கான எங்கள் முயற்சிகளில் ஒரு பெரிய முன்னேற்றத்தைக் குறிக்கிறது. செயற்கை நுண்ணறிவால் இயக்கப்படும் பகுப்பாய்வு மூலம், முதுமையின் வழிமுறைகள் பற்றிய ஆழமான நுண்ணறிவுகளைப் பெறலாம், இது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும், மேலும் புதுமையான தலையீடுகளுக்கு வழி வகுக்கும்." என்று ஐஐசியின் பேராசிரியரும் லாங்கிவிட்டி இந்தியாவின் சூருங்கிணைப் பாளருமான டாக்டர் தீபக் சைனி கூறினார்.

நோயாளி-மருத்துவர் தொடர்புகளை மறுவரையறை செய்தல், மருத்துவ முடிவுகளை மேம்படுத்துதல், மருத்துவமனை பணிப்பாய்வுகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் நோயாளி விளைவுகளை மேம்படுத்துதல் ஆகியவற்றை முன்மொழியும் செயற்கை நுண்ணறிவால் இயக்கப்படும் தீர்வுகளை ஒருங்கிணைக்க ஆர்கா ஏஐ கேரளாவின் பிலீவர்ஸ் சர்ச் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையுடன் கூட்டு சேர்ந்துள்ளது. மருத்துவ பாடத்திட்டங்களில் அறிவார்ந்த அமைப்புகளை உட்பொதிப்பதன் மூலம், கேரளாவின் பிலீவர்ஸ் சர்ச் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, நிர்வாகப் பணிகளில் ஈடுபடுவதை விட, தங்கள் நோயாளி களுடன் அதிக தரமான நேரத்தை செலவிடும் புதிய தலைமுறை செயற்கை நுண்ணறிவு திறன் வாய்ந்த சுகாதார நிபுணர்களை வளர்க்க முயல்கிறது.

"எங்கள் மருத்துவமனை மற்றும் கல்வித் திட்டங்களுக்கு சமீபத்திய செயற்கை நுண்ணறிவு கண்டுபிடிப்புகளைக் கொண்டுவர ஆர்கா ஏஐ உடன் இணைந்து பணியாற்றுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்," என்று கேரளத்தின் திருமதி ரோஸி மார்செல் டி பிலீவர்ஸ் சர்ச் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கூறினார்.

"தரவு சார்ந்த நுண்ணறிவுகளால் செயல்படுத்தப்பட்ட இந்திய மக்கள் தொகைக்கான விரிவான சுகாதார உருவப்படத்தை உருவாக்குவதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம். இந்த கட்டமைக் கப்பட்ட தரவு கட்டமைப்பை இயந்திர கற்றல் மற்றும் ஆழமான கற்றல் பகுப்பாய்விற்குப் பயன்படுத்தலாம், இது சமூகப் பயன்பாட்டிற்கான முன்கணிப்பு மாதிரியாக்கத்திற்கு வழிவகுக்கும். நீண்ட காலத்திற்கு, தனிநபர்களுக்கான சிறந்த சுகாதார விருப்பங்களைப் பெற, வாழ்க்கை முறை சுகாதாரத் தரவு மற்றும் மூலக்கூறு தரவுகளுடன் மருத்துவ மெட்டாடேட்டாவை ஒருங்கிணைப்போம்" என்று ஆர்கா ஏஐ-இன் நிறுவனர் ரோஹித்ராஜன் கூறினார்.

# வேதியியல் மீது சர்வதேச மாநாடு எஸ்ஆர்எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கல்வி நிறுவனம் (எஸ்ஆர்எம்ஐஎஸ்தி) நடத்தியது



சென்னை, 15 பிப்ரவரி 2025: பொருண்ம (மெட்டீரியல்) வேதியியலில் சமீபத்திய முன்னேற்றங்கள் மீது 9-வது சர்வதேச மாநாட்டை எஸ்ஆர்எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கல்வி நிறுவனம் (எஸ்ஆர்எம்ஐஎஸ்தி) நடத்தியது. இதில் ஜப்பானின் பிரபல கியோட்டோ பல்கலைக்கழகத்திற்கும் மற்றும் எஸ்ஆர்எம்ஐஎஸ்தி-க்குமிடையே ஒரு வரலாற்று சிறப்புமிக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் (எம்ஓயு) கையெழுத்தானது. பிரான்ஸ், தென்கொரியா, ஜெர்மனி, தாய்லாந்து மற்றும் ரஷ்யா உட்பட பல்வேறு நாடுகளிலிருந்தும் மற்றும் இந்தியாவெங்கிலுமிருந்தும் பங்கேற்பாளர்களை ஈர்த்த இம்மாநாட்டு நிகழ்வில் 300-க்கும் அதிகமான ஆராய்ச்சி கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

பிரான்ஸ் நாட்டின் மாற்று வழிமுறை ஆற்றல்கள் மற்றும் அணுசக்தி ஆணையம் (சிஇஏ) மற்றும் பிரான்ஸ் நாட்டின் யுனிவர்சிட்டி கஸ்டேவ் ஈஃபில் ஆகிய அமைப்புகளின் ஒத்துழைப்போடு எஸ்ஆர்எம்ஐஎஸ்தி-ன் வேதியியல் துறையால் மூன்று நாட்கள் நிகழ்வாக இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பொருண்ம வேதியியல் துறையில் உலகளாவிய ஒத்துழைப்பிற்கும் மற்றும் அறிவு பரிமாற்றத்திற்கும் ஒரு சிறந்த செயல்தளமாக இந்நிகழ்வு அமைந்தது. ஒடிசா மாநிலத்தின் புவனேஸ்வரில் அமைந்துள்ள அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் (நைஸர்) இயக்குநர் புரொஃபசர் ஹிரேந்திர நாத் கோஷ் இம்மாநாட்டை தொடங்கி வைத்தார். தொழில்நுட்ப புத்தாக்கத்தில் அதுவும் குறிப்பாக பல்வேறு துறைதளங்களில் பொருண்ம வேதியியலின் 'ளர்ச்சியடைந்து வரும் முக்கியத்துவத்தை தனது சிறப்புரையில் புரொஃபசர் கோஷ் வலியுறுத்தி குறிப்பிட்டார். பொருண்ம வேதியியலில் தற்போது நிலவும் அதிக சிக்கலான சவால்கள் குறித்து குறிப்பிட்ட அவர், நிலைப்புத் தன்மையுள்ள, மறுசுழற்சி செய்யக் கூடிய பொருட்களை வடிவமைப்பது மற்றும் ஆய்வகத்திலிருந்து சந்தை வரை சுற்றுச்சூழல் மீதான தாக்கத்தை குறைப்பதற்கான அவசியத்தை சுட்டிக்காட்டினார். எஸ்ஆர்எம்ஐஎஸ்தி-ன் துணைவேந்தர் புரொஃபசர் சி. முத்தமிழ்ச்செல்வன் ஆற்றிய உரையில் ஆற்றல் தீர்வுகளையும், நிலைப்புத் தன்மையையும் மற்றும் சுற்றுச்சூழலின் தூய்மையாக் கலையும் முன்னெடுத்துச் செல்வதில் வேதியியலின் மிக முக்கியமான பங்களிப்புகளை பட்டியலிட்டு வலியுறுத்தினார்.

பொருண்ம வேதியியல், மேம்பட்ட ஆற்றல் பொருட்கள், 2டி மாற்றுகை உலோக கால்கோஜெனைடுகள், பெரோவ்ஸ்கைட் சூரிய மின்கலங்கள், மீண்டும் சார்ஜிங் செய்யக்கூடிய பேட்டரிகள், மருந்து வழங்கலுக்கான சாதனங்கள், பேட்டரி தொழில்நுட்பங்களில் புரோட்டான் மாற்றுகை செயல்முறைகள், ஹைபிரிட் (கலவை) பொருட்கள் ஆகிய பிரிவுகளில் தங்களது ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புகள் மற்றும் மேம்பாடுகள் பற்றிய தகவலை சமர்ப்பிக்கவும் மற்றும் அதை குறித்து விவாதிக்கவும் ஒரு சிறப்பான மேடையை இந்த மாநாட்டு அமர்வுகள் பங்கேற்பாளர்களுக்கு வழங்கின.

# செம்பியம் பகுதியில் பூட்டிய வீட்டின் பூட்டை உடைத்து நுழைந்து எலக்டிரானிக் பொருட்களை திருடிச் சென்ற வழக்கில் ஒருவர் கைது.



சென்னை, 15 பிப்ரவரி 2025: சென்னை, பெரம்பூர், எஸ்எஸ்வி கோயில் 1வது தெருவில் வசித்து வரும் ஜான்ஜோசப், வ/40, த/பெ. ஏசுபாதம் என்பவர் பல இடங்களுக்கு சென்று வெல்டிங் செய்யும் வேலை செய்து வருகிறார். ஜான்ஜோசப், கடந்த 09.02.2025 அன்று மாலை வீட்டை பூட்டிவிட்டு வெளியே சென்று பின்னர் இரவு வீட்டிற்கு வந்து பார்த்தபோது, வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டு, வீட்டில் வைத்திருந்த ஹோம் தியேட்டர் மற்றும் டிரில்லிங் மெஷின் ஆகியவை திருடு போயிருந்தது தெரியவந்தது. இது குறித்து ஜான்ஜோசப், கே-1 செம்பியம் காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின் பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை செய்தனர்.

கே-1 செம்பியம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி வீட்டில் திருடிய கணேஷ் (எ) பிள்ளையார், வ/19, த/பெ.சேகர், குளக்கரை சாலை, மங்களபுரம், ஓட்டேரி, சென்னை என்பவரை கைது செய்தனர். விசாரணையில், எதிரி கணேஷ் அவரது கூட்டாளியுடன் சேர்ந்து இருசக்கர வாகனத்தில் செம்பியம் காவல் நிலைய எல்லைக் குட்பட்ட பகுதிகளில் நடந்து சென்ற நபர்களிடம் இருந்து செல்போளை பறித்துச் சென்று தொடர்பான 5 வழக்குகளில் கைதாகி சிறைக்கு சென்று கடந்த ஆகஸ்டு-2024 பிணையில் வந்து, மீண்டும் கொளத்தூர் பகுதியில் இருசக்கர வாகனத்தை திருடிச் சென்று கைதாகி சமீபத்தில் பிணையில் வந்து, சம்பவத்தன்று இருவரும் சேர்ந்து பெரம்பூர், எஸ்எஸ்வி கோயில் தெரு வழியாக நடந்து செல்லும்போது, மேற்படி புகார்தாரர் ஜான்ஜோசப்பின் மிடு பூட்டியிருப்பதை கண்டு அவரது வீட்டின் பூட்டை உடைத்து பொருட்களை திருடிச் சென்றதும் யெூரிய வந்தது. மேலும், இவ் வழக்கில் தொடர்புடைய கணேஷின் கூட்டாளியை போலீசார் தேடி வருகின்றனர். கைது செய்யப்பட்ட எதிரி ககேஷ் விசாரணைக்குப் பின்னர் (13.02.2025) அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.